## வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, மன்றத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில்,நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பெரிதாகும்.தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்றத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது மன்றத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க மன்றம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களது முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய ''சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவகம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நிமயங்களுடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு இலக்கம் 07 இன் 57 ஆம் பிரிவின் பிரகாரமும் மன்றத்தின் கணக்கீட்டுக் கொள்கைக்கும் அமைய நடைமுறை அல்லாத சொத்துக்களைப் பயன்படுத்தக்கூடிய நாளிலிருந்து தேய்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், 2018 டிசெம்பர் 12 ஆந் திகதி ஜப்பானிய அரசிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 15,000,000 பெறுமதியுடைய சாரதிப் பயிற்சி உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிடப்படாததுடன் அதற்குரிய ரூபா 97,603 தேய்மானமும் கணக்கிலிடப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிடுவதற்கும் கணக்கில் திருத்தம் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டின்போது இலங்கை பொதுத்துறைக்கணக்கீட்டு நியமம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரி உண்டியல்களின் பொருட்டு முன்னைய ஆண்டுக்கெனப் பெறப்பட்ட வட்டி வருமானமாகிய ரூபா 4,128,270 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய மிகையில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு மேற்கொள்ளப்படுவதால் இவ்வாறானதொரு நிலைமை உருவாகி உள்ளது. | முன்னைய ஆண்டிற்கெனப் பெறப்பட்ட வட்டி வருமானம் முன்னைய ஆண்டிற்கான மிகையில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 104,742 முகப் பெறுமதியுடைய திறைசேரி உண்டியல்கள் கணக்கிலிடப்படவில்லை. | குறித்த பதிவேடு சீராக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் பிழையின்றி குறித்துக் கொள்ளப்படுவதை கவனிக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் மன்றம் வரவு, செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டியபோதும், மீளாய்வாண்டினது வரவு செலவுத் திட்டத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | குறைபாடு நிவர்த்தி செய்யப்படும். | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரவு, செலவுத் திட்டம் ஆண்டின் ஆரம்பத்திற்கு முன்னரே அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 754 | 2018 ஆம் ஆண்டிற்கான இன்வென்டரி பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. | பதிவேட்டை நாளதுவரையாக்கிப் பேணுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 754 க்கு அமைய இன்வென்டரி பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | நிறுவனத்தின் கூட்டத் தொடர்களின்போது செயலாற்றல் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியபோதும், நடாத்தப்பட்ட மன்றக் கூட்டங்களில் அவ்வாறாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சின் செயலாளரது தலைமையில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை பணிப்பாளர் சபைக்குச சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஈ) பிரிவு | மன்றக் கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி என்பன திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை. | ஆணைக்குழுவாக ஸ்தாபிக்கப்படுவதையடுத்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்துரைக்குஅமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) 2005 சனவரி 27 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவுடன் | 2017/2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் | சுற்றறிக்கை அறிவுறுத்துரைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், ஆரம்பம் முதலாக மன்றம் ஆண்டறிக்கை எதனையும் தயாரித்திருக்கவில்லை. | தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2010 டிசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஆண்டொன்றில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் 01 கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமையால் கணக்காய்வுக் குழுவுக்கு அங்கத்தவர்களை நியமிக்க முடியாது போனது. இதனால் கூட்டங்கள் நடைபெறவில்லை. 2019 முதல் முறையாகக் கூட்டங்கள் நடாத்தப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்துரைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேறு ரூபா 52,006,537 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,959,713 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 7,046,824 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. பிரசாரச் செலவினம் 85 சதவீதம் குறைந்தமையும் இழப்பீடு வழங்குதல் 36 சதவீதத்தால் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்புக்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை ஆரம்பித்து 21 ஆண்டுகளாகியும் 1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் (திருத்தம்) மூலம் மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தில் காணப்படும் பிரதான நோக்கங்களுக்குரிய பணிகளான ஒவ்வொரு ஆண்டும் வீதி இணையத்தளத்தில் புதிதாகச் சேரும் வீதிகள் தொடர்பான மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை, வீதி விபத்துக்கள், சொத்து இழப்பு போன்ற சகல தகவல்களையும் உள்ளடக்கிய கணனித் தரவுக் களஞ்சியம் பேணப்படுதல், தொடர்புடைய விடயம் | இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மன்ற நோக்கங்களை ஈடேற்றுவதற்கான பணிகள் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமான தகவல்களைச் சேகரித்தல், ஆராய்ச்சி மேற்கொள்ளல், களப் பரிசோதனை மேற்கொள்ளலும் உதவியளித்தலும், வீதிப் பாதுகாப்பு மற்றும் தொர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் சம்பந்தமாக அரசிற்கு மதியுரை வழங்குதல், வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் பாதிப்படைந்தோருக்கு ரூபா 8,200,000 இழப்பீடு வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 5,200,000 ஆகக் குறைந்வடைந்துமிருந்தது. விண்ணப்பப் பட்டியல்களில் நிலவும் குறைபாடு காரணமாக மன்றத்தின் அங்கீகாரமும் நிலையியற் குழுவினது அங்கீகாரமும் பெறப்படுவதில் தாமதம் ஏற்படுவதே கொடுப்பனவுக் குறைவுக்கான காரணமாகும். | விண்ணப்பப் படிவத்துடன் ஆவணங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருப்பின் குறித்த செயற்பாட்டிற்கு அமைய தாமதமின்றிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | தாமதமின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை ஆணைக்குழுவாக மாற்றஞ் செய்வதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளைத் தயாரித்தல் 2010 ஆம் ஆண்டு முதலாக திட்டமிடப்பட்டபோதும், அப்பணி மீளாய்வாண்டின்போதும் முடிவடையவில்லை. | 2019 யூன் 10 ஆந் திகதியளவில் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சரது அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீதி விபத்துக்கள் தொடர்பன தரவுப் பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் புகையிரத விபத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25 மரணங்களாலும் 331 தீவிர விபத்துக்களாலும் அதிகரித்திருந்தன. புகையிரதக் கடவைகளில் விபத்துக்கள் 181 உயர்வுக்குள்ளாகியிருந்தன. இவ்விபத்துக்களைத் தவிர்த்து கொள்வதற்கு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 2.8 சதவீதம் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, மன்றத்தை உருவாக்கியதன் சமூகப் பொறுப்பு முறையாக நிறைவேறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்தம் வீதிகளைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்குள்ளாவதை கருத்திற் கொள்ளுமிடத்து விபத்துக்களின் சதவீத எண்ணிக்கை குறைவானதாகும். | வீதிப் பாதுகாப்புக்கான மன்றத்தை நிறுவியதன் நோக்கம் ஈடேறுமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதியப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின்போது ரூபா 66 மில்லியன் வருமானம் சம்பாதிக்கப்பட்டிருந்தபோதும், மன்றம் நிறைவேற்றிய பணிகளுக்கு அதில் 14 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. முதலீட்டு விகிதம் வருடாந்தம் உயர் மட்டத்தில் இருந்தபோதும், மன்றத்தின் நோக்கத்தை ஈடேற்றுவதற்கு அது பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | வீதி பாதுகாப்புக்கான தேசிய மன்றம் எதிர்காலத்தில் ஆணைக்குழுவாக அமைந்ததன் பின்னர் அதன் முகாமைத்துவம் சிறப்பாக நடைபெறுவதற்கு தற்போதைய நாளாந்தச் செலவினத்தைக் குறைந்த மட்டத்தில் வைத்து மேலதிகத் தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை நிறுவிய அதிகாரச் சட்ட நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கு நிதி பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(எ) பிரிவின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2019 யூன் 10 ஆந் திகதியளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2016 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் 2.14 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 200,000 க்கு மேற்பட்ட வாகனப் பழுதுபார்த்தலுக்கு அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றைப் பழுதுபார்ப்பதற்கு மீளாய்வாண்டில் செலவழிக்கப்பட்ட ரூபா 821,593 தொடர்பாக அவ்வாறான அங்கீகாரம் பெறப்படவில்லை. | அமைச்சிலிருந்தே வாகனக் குழாமிலுள்ள வாகனங்கள் பெறப்பட்டுள்ளன. அமைச்சினூடாக பழுதுபார்த்தல் நடைபெறுவதால் விசேட அங்கீகாரத்திற்கான தேவை எழவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(ஆ) பந்தியின் பிரகாரம் வருடாந்த வரவு, செலவுத்திட்டத்தில் உள்ள முன்னுரிமையின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அமுல்படுத்தல் காலவரையறை மற்றும் அந்நடவடிக்கைகளது எதிர்பார்க்கப்பட்ட முடிவு / பெறுபேறு அறிவிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அங்கீகாரமளிக்கப்பட்டிராத வரவு, செலவுத் திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், செயற்பாடுகளது எதிர்பார்த்த பெறுபேறும் காட்டப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்தில் இக்குறைபாடுகள் நீக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டிக் வீதிப் பாதுகாப்புக்காக தேசிய மன்றத்தை நிறுவியதன் பிரதான நோக்கத்தின் அடிப்படையில் 2010 - 2017 காலப்பகுதியிலும் மீளாய்வாண்டிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 09 செயற்திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை. அவ்வாறே, செயலாற்றலின் அளவுகோலாக தேசிய மட்டத்தில் செயற்படும் பயிற்சி நிவாரணப் பணிகள் சம்பந்தமாக அநேக செயற்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டபோதும், மூலவளப் பங்களிப்பாளர்கள் ஆரம்பத்திலேயே இனங்காணப்படாமையால் நிகழ்ச்சித் திட்டங்களது விளைவுகள் குறைந்த மட்டத்தில் இருந்தன. | 2019 ஆம் ஆண்டில் அமுலாக்கப்படவுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள பணிகள் ஆண்டின்போது நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |